**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**
**Case No: CC.1239/2022**
**Prosecution Witnesses : 3**

| | | | |
|---|---|---|---|
| Name | : **பெருமாள்** | Caste | : |
| Father 's Name / Husband Name | : **ராமசந்திரன்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர் இல்லை)
**(26.03.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது மதுரை மாவட்டம் சிந்துபட்டி காவல் நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்து வருகின்றேன். இதற்கு முன்பு மேற்படி காவல் நிலையத்தில் பணிபுரிந்த சார்பு ஆய்வாளர் திரு.குபேந்திரன் என்பவரின் கையெழுத்து மற்றும் கையொப்பம் எனக்கு நன்கு பரிச்சயம். மேற்படி சார்பு ஆய்வாளர் பணி ஓய்வு பெற்றுவிட்டதால் வழக்கு கோப்பை பார்வையிட்டு ஆவணங்களின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கின்றேன். கடந்த 09.03.2022ம் தேதி காலை 11.30 மணியளவில் சார்பு ஆய்வாளர் அவர்கள் நிலையத்தில் இருக்கும் போது நாகராஜன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண். 35/2022 பிரிவுகள் 294(பி), 506(1) இதச மற்றும் பிரிவு 4 TNPHW Actன் படி வழக்கு பதிவு செய்துள்ளார். புகார் மனுவையும் முதல் தகவல் அறிக்கையையும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். மற்ற நகல்களை மேல்அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்துள்ளார். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 2 ஆக குறியீடு**

**செய்யப்படுகிறது**. பின்னர் இவ்வழக்கை தனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கு கொண்டு அன்றைய தினமே 12.30 மணிக்கு சம்பவம் இடம் சென்று சாட்சிகள் முத்துபாண்டி த/பெ.தனிக்கொடி மற்றும் முத்துபாண்டி த/பெ.துரைபாண்டி ஆகியோர்களின் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வைஇட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **மேற்படி பார்வை மகசர் அ.சா.ஆ.3, மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆகும்.** மேலும் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 8 வரை உள்ளவர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் எதிரியை தேடி வந்த நிலையில் எதிரி கட்டதேவன்பட்டி விலக்கு அருகே அதே தேதியில் 15.00 மணிக்கு நின்று கொண்டிருந்த போது காரணம் கூறி கைது செய்து சாட்சிகள் மூக்கையா மற்றும் பிரியதர்ஷினி ஆகியோர்களின் முன்னிலையில் எதிரி தாமாக முன் வந்து ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். பின்பு ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி புளூகலர் VIVO 19 செல்போனை அத்தாட்சியில் அதே சாட்சிகள் முன்பு 16.00 மணிக்கு கைப்பற்றியுள்ளார். **அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ. 5 ஆகவும்** மற்றும் **அத்தாட்சி அ.சா.ஆ. 6 ஆகவும்**, **படிவம் 91 அ.சா.ஆ.7 ஆகவும் குறியிடு செய்யப்படுகிறது**. ஒப்புதல் வாக்குமூலத்தின் மூலம் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்து **சா.பொ.1 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. பின்பு எதிரியை தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். பின்னர் ஒப்புதல் வாக்குமூல சாட்சிகளை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்து சார்பு ஆய்வாளர் தனது விசாரணையை முடித்து எதிரி மீது சட்டப்பிரிவுகள் 294(பி), 506(1) இதச மற்றும் பிரிவு 4 TNPHW Actன் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரிகள் தரப்பில் கு.வி:**

வழக்கு ஆவணங்களை பார்வையிட்டு சாட்சியம் அளித்துள்ளதால் எனக்கு விசாரணை பற்றி தெரியாது என்றும் பொய்யான தகவல்களை தயார் செய்து எதிரியின் மீது பொய்யான குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளனர் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை.